முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. சி.தினேஷ்குமார், M.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2023–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் நாள், வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.93/2010

CNR No.TNMD130000392010

-----

சந்திரசேகரன் ... வாதி

/ எதிர்/

1. டி.கொக்குளம் பஞ்சாயத்து தலைவர்,
   டி.கொக்குளம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலகம்,
   கள்ளிக்குடி.
3. மாவட்ட ஆட்சி தலைவர்,
   மதுரை. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 06.04.2023 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருந்த வழக்கில், 1 ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை, சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

தாவா அ அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர் பரிகாரமாக தாவா ஆ

அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிரதிவாதிகள் அகற்ற வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தவறினால் நீதிமன்றம் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரியும், தாவா அ அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளோ அல்லது அவரது வகையாட்களோ வேறு எவ்விதமான கட்டுமானங்களோ கட்டக்கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>பிராதின் சுருக்கம்</u> :**

தாவா அ அட்டவணை சொத்தினை, வாதியின் தகப்பனார் மாரிமுத்து 19.08.1964 ம் தேதியில் பதிவு கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்றார் என்றும், கிரையம் வாங்கியது முதல் தகப்பனார் விறகுகள் போட்டும் குப்பைக் கூலங்கள் போட்டும் அனுபவம் செய்து வந்தார் என்றும், வாதியின் தகப்பனார் இறப்பிற்கு பின்பு தாவா அ அட்டவணை சொத்தானது வாதிக்கு கிடைக்கப்பெற்று வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும்,

தாவா சொத்தானது புஞ்சை நிலம் என்றும், தற்போது வீட்டடி மனைகளாக மாற்றப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 14 செண்டு என்றும், அது 18 நபர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றும், வாதியின் தகப்பனார் தாவா சொத்து அடங்கிய புல எண்ணில் 18 செண்டினை ராமசாமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றும், ராமசாமி என்பவர் மேற்படி கூட்டு பட்டாதாரர்களில் ஒருவர் என்றும், தாவா சொத்திற்கு கிழக்கே பஞ்சாய்த்து யூனியன் பள்ளி உள்ளது என்றும், அது தாவா சொத்தின் கிழக்கு மாலாக காட்டப்பட்டுள்ளது என்றும்,

1ம் பிரதிவாதியானவர் தாவா சொத்தானது பஞ்சாயத்து யூனியனுக்கு பாத்தியப்பட்டது என கூறிக்கொண்டு பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கு கிழக்கே பஞ்சாயத்து அலுவலகம் கட்டப்போவதாக பிரஸ்தாபம் செய்தார் என்றும், கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், 2ம் பிரதிவாதியிடம் பஞ்சாயத்து அலுவலகமோ அல்லது வேறு எந்தவித கட்டுமானங்களும் கட்டக்கூடாது என வலியுறுத்தி வாதி மனுச்செய்ததால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் அஸ்திவாரம் அமைக்க முயற்சி செய்தார் என்றும், அதனை வாதி தடுத்தும் அஸ்திவாரத்தை பிரதிவாதிகள் அமைத்தனர் என்றும்,

வாதி பாலமுறை கட்டிட வேலையை நிறுத்தக் கேட்டும் பிரதிவாதிகள் கட்டிட வேலையை நிறுத்தவில்லை என்றும், இந்நிலையில் 21.02.2010 ல் 1ம் பிரதிவாதியும் அவரது ஆட்களும் தாவா இடத்தில் மீண்டும் கட்டுமானங்களை ஏற்படுத்த முயற்சித்தனர் என்றும் எனவே தாவா அ அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா ஆ அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற கோரியும், தாவா அ அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளோ அல்லது அவரது வகையாட்களோ வேறு எவ்விதமான கட்டுமானங்களோ கட்டக்கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இந்த வழக்கு வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :

வாதி அவரது வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளில் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளும் சங்கதி தவிர, மற்ற சங்கதிகள்

உண்மைக்கு புறம்பானவை என்று மறுக்கப்படுகிறது என்றும் வாதி பிராதில் கூறியுள்ள சங்கதிகளை, வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும்,

தாவா சொத்தின் புல எண்.17/18 ஆனது புல எண்.17/18A, 17/18B மற்றும் புல எண்.17/18C ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், டி.கொக்குளம் பஞ்சாயத்து கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருந்ததால் அதனை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்ட 2ம் பிரதிவாதியிடம் 26.11.2009ம் தேதியிட்ட கடிதம் வழியாக கோரப்பட்டுள்ளது என்றும், அதன் தொடர்ச்சியாக 3ம் பிரதிவாதி 29.11.2009ல் ந.க.எண். 2391/2008/எ5 நடவடிக்கை மூலம் ரூ.6,00,000/—ம் செலவில் புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கினார் என்றும்,

சர்வேயர் உதவியுடன் 13.01.2010ம் தேதி அளந்து கட்டிடம் கட்டப்பட்டது என்றும், புல எண்.17/18C 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றும், ஏற்கனவே இருந்த பழைய பள்ளிக்கட்டிடத்தை இடித்து விட்டுத்தான் அந்த இடத்தில் புதிய பஞ்சாய்த்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும், எனவே வாதியின் வழக்கை பிரதிவாதிகள் தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**5. <u>எழுவினாக்கள்</u>** :

5.1 இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, 2, 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும்

இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தா ?
2. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தரப்பில் சட்டத்திற்கு புறம்பான வகையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா ?
3. வாதி கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா ?
4. வாதி கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா ?
5. தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

6. <u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :

6.1 வாதி தரப்பில் வாதி சந்திரசேகரன் என்பவர் வா.சா.1 ஆகவும், சக்திவேல் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, அவர்களில் வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்களும், நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டு உள்ளன.

6.2 பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதிக்கு சாட்சியம் மற்றும் வாதுரைக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் சாட்சியம் மற்றும் வாதுரை செய்யாத காரணத்தால், அவரது தரப்பு சாட்சியம் மற்றும் வாதுரை நீதிமன்றத்தால் முடித்துவைக்கப்பட்டுள்ளது. சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

6.3 மேலும் மாண்புமிகு சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2020ல் 30.03.2021ம் தேதி ஏற்பட்ட உத்தரவின்பேரில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மற்றும் புல வரைபடங்கள் முறையே நீ.ம.சா.ஆ.5 முதல் நீ.ம.சா.ஆ.7 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

**<u>எழுவினாக்களுக்கான தீர்வு</u>** :

**7. <u>எழுவினாக்கள் 1 மற்றும் 2– க்கான தீர்வு</u> :**

7.1 தாவா வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் தாவா சொத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் தாவா சொத்தில் மேற்கொண்டு கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்ற நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆக, தாவா சொத்திற்கான உரிமையையும், அதில் ஆக்கிரமிப்பு செய்து பஞ்சாயத்து அலுவலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும் நிரூபணம் செய்ய வேண்டியது வாதி தரப்பு கடமை ஆகும்.

7.2 தாவா சொத்தை உள்ளடக்கிய மொத்த சொத்தான 1 ஏக்கர் 14 செண்டு புஞ்சை நிலமாக இருந்து வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு, அவைகள் 18 நபர்களின் பெயர்களில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், அதில் கண்ட ராமசாமி என்பவரிடம் வாதியின் தகப்பனாரான மாரிமுத்து என்பவர் தாவா சொத்தை கிரையம் பெற்று அவருக்கு பிறகு தற்போது வாதி வசம் தாவா சொத்து உள்ளதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.3 இந்நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து இல்லை என்றும், தாவா சொத்தை உள்ளடக்கிய மொத்த சொத்தான சர்வே எண்.17/18 என்பது தற்போது சர்வே எண்.17/18A, சர்வே எண்.17/18B மற்றும் சர்வே எண்.17/18C ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் சர்வே எண்.17/18C என்பது பஞ்சாயத்து தலைவர் பெயரில் உள்ளது என்றும், கட்டிடமானது சர்வே எண்.17/18C–ல் கண்ட சொத்தில் கட்டப்பட்டுள்ளது என்றும், சர்வே

எண்.17/18C–க்கும் வாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.4 இந்நிலையில், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் தாவா சொத்தை உள்ளடக்கிய மொத்த சொத்தான சர்வே எண்.17/18–க்கு பிராதில் குறிப்பிட்டுள்ளவாறு கூட்டுபட்டா இருப்பதற்கான பட்டா எண்.851 வா.சா.ஆ.2 ஆகவும், வாதியின் தகப்பனார் மாரிமுத்து பட்டாதாரர்களின் ஒருவரான ராமசாமி என்பவரிடம் தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7.5 ஆனால், மேற்கண்ட சர்வே எண்.17/18 என்பது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.17/18C 1ம் பிரதிவாதியான பஞ்சாயத்து தலைவர் பெயரில் இருப்பதாக குறிப்பிட்டுள்ள பிரதிவாதிகள் தரப்பில் அவ்வாறு சர்வே எண்.17/18 என்பது சர்வே எண்.17/18A, சர்வே எண்.17/18B மற்றும் சர்வே எண்.17/18C ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதற்கும், சர்வே எண்.17/18C 1ம் பிரதிவாதியின் பெயரில் இருப்பதற்கான எந்த ஒரு ஆவணமும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

7.6 அதேபோன்று, பிரதிவாதிகள் அனைவரும் அரசு தரப்பு அதிகாரிகளாக உள்ள நிலையில், தாவா சொத்தை உள்ளடக்கிய சர்வே எண்.17/18 என்பது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் சர்வே எண்.17/18C 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதையும் நிரூபணம் செய்யும் வகையில் எந்த ஒரு வருவாய் ஆவணத்தையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையிலும், வருவாய்த்துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்களை நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம்

அளிப்பதற்கு எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படாத நிலையிலும், தாவா சொத்தை உள்ளடக்கிய சர்வே எண்.17/18 உட்பிரிவு செய்யப்பட்டு தற்போது சர்வே எண்.17/18C தற்போது 1ம் பிரதிவாதியான பஞ்சாயத்து தலைவர் பெயரில் உள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

7.7 மேலும், ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள நில அளவையரின் சர்வே எண்.17/18–க்கான புலவரைபடமான நீ.ம.சா.ஆ.6 ஆவணத்தை பார்வையிடுகையில், சர்வே எண்.17/18–ல் கண்ட சர்வே எண்.17/18C–ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக அரசு அதிகாரியான வட்ட சார் ஆய்வாளர் தனது புல வரைபடத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

7.8 மேற்படி வரைபடைத்தை பார்வையிடுகையில், சர்வே எண்.17/18–ல் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற சர்வே எண்.17/18–ல் கண்ட மொத்த சொத்தான 1 ஏக்கர் 14 செண்டில் கீழ்புறம் தென்புறத்தில் உள்ள பகுதியை சுட்டிக்காட்டி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக வட்ட சார் ஆய்வாளர் சுட்டிக்காட்டி இருப்பது தெரியவருகிறது.

7.9 மேலும், நீதிமன்ற ஆணையரும் தனது அறிக்கையில், புலவரைபடத்தில் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதி ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், புலவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடப்பகுதியின் அளவுகள் ஸ்தலத்தில் உள்ள அளவுகள் படியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தனது

பார்வையில் பஞ்சாயத்து அலுவலக கட்டிடம் பெரும் பகுதி சர்வே எண். 17/18C –ல் கட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

7.10 ஆக, தாவா சொத்தை உள்ளடக்கிய சர்வே எண்.17/18–ல் கீழ்புறம் தென்புறத்தில் 18 செண்டை வாதியின் தகப்பனார் கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணத்தையும், கிரையம் கொடுத்த நபர் பெயரில் உள்ள கூட்டு பட்டாவையும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள நிலையிலும், சர்வே எண்.17/18–ல் உட்பிரிவு செய்யப்பட்ட கீழ்புறம் தென்புறத்தில் உள்ள சர்வே எண்.17/18C என்பது பஞ்சாயத்து தலைவர் பெயரில் உள்ளது என்பதற்கான எந்த ஒரு ஆவணமும் பிரதவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், வட்ட சார் ஆய்வாளர் தனது புலவரைபடத்தில் சர்வே எண்.17/18C–ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக ஆவணம் தாக்கல் செய்துள்ள நிலையிலும், தாவா சொத்தான வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற சர்வே எண்.17/18–ல் கண்ட மொத்த சொத்தான 1 ஏக்கர் 14 செண்டில் கீழ்புறம் தென்புறத்தில் கண்ட 18 செண்டு நிலமானது வாதிக்கு சொந்தமானது என்பதையும், அந்த பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து பஞ்சாய்த்து அலுவலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும், வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆக, தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும், பிரதிவாதிகளால் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

**8. <u>எழுவினா 3– க்கான தீர்வு</u> :**

8.1 தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும், அதில் பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும்,

ஏற்கனவே மேற்கண்ட 1வது மற்றும் 2வது எழுவினாக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்வதும், தாவா சொத்தில் பிரதிவாதிகளால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை அகற்றுவதும் அவசியம் ஆகும்.

8.2 எனவே, தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தில் பிரதிவாதிகளால் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை அகற்றுவதற்கான செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று மேற்கண்ட எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**9. <u>எழுவினா 4– க்கான தீர்வு</u> :**

9.1 மேற்கண்டவாறு தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும் அதனால் தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தில் மேற்கொண்டு கட்டிடம் கட்ட பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை.

9.2 ஆக தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு கட்டிடம் கட்ட உரிமை இல்லாத நிலையில், தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட கூடாது என்ற நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியது அவசியம் ஆகும். எனவே, வாதிக்கு அவர் கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**10. <u>எழுவினா 5–ற்கான தீர்வு</u> :**

இவ்வழக்கின் வாதி கோரியுள்ள பிராதான பரிகாரங்களான விளம்புகை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி இவ்வழக்கின் தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல என்றே இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்தும், தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகளால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை 2 மாத காலத்திற்குள் பிரதிவாதிகள் அகற்ற வேண்டும் என்ற செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் மேற்கொண்டு கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என்ற நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 28.04.2023ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்.சி.தினேஷ்குமார்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

1. **<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>** :

வா.சா.1. சந்திரசேகரன்
வா.சா.2. சக்திவேல்

2. **<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | 19.08.1964 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.2. | பட்டா எண்.851–க்கான 10(1) கணினி சிட்டா. |
| வா.சா.ஆ.3. | போட்டோ மற்றும் நெகட்டிவ் |
| வா.சா.ஆ.4. | சர்வே எண்.17–க்கான புல வரைபடம். |

3. **<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :

பி.வா.சா.1. ராமசந்திரன்

4. **<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1. | கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் டி.கொக்குளம் ஊராட்சிமன்ற தீர்மான நகல். |
| பி.வா.சா.ஆ.2. | கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் டி.கொக்குளம் ஊராட்சிமன்ற டெண்டர் விளம்பரம். |
| பி.வா.சா.ஆ.3. | கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் டி.கொக்குளம் ஊராட்சிமன்றத்திற்கு வேலு என்பவர் அனுப்பிய டெண்டர் விண்ணப்பம். |
| பி.வா.சா.ஆ.4. | கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் டி.கொக்குளம் ஊராட்சிமன்றத்திற்கு ஆர்.மாயாண்டி என்பவர் அனுப்பிய டெண்டர் விண்ணப்பம். |
| பி.வா.சா.ஆ.5. | கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், டி.கொக்குளம் ஊராட்சிக்கான வேலை உத்தரவு. |
| பி.வா.சா.ஆ.6. | கள்ளிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர், டி.கொக்குளம் ஊராட்சி தலைவருக்கு எழுதிய கடிதம். |
| பி.வா.சா.ஆ.7. | கள்ளிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு எழுதிய கடிதம். |
| பி.வா.சா.ஆ.8. | மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களின் உத்தரவு. |

5. **<u>நீதிமன்ற சாட்சிகள் :</u>** இல்லை.

6. **நீதிமன்ற சான்றாவணங்கள்** :

நீ.ம.சா.ஆ.1. டி.கொக்குளம் புல எண்.17–க்கான புல வரைபடங்கள்

நீ.ம.சா.ஆ.2. 14.12.2012 ம் தேதியிட்ட ஆணையர் அறிக்கை.

நீ.ம.சா.ஆ.3. புல எண்.17–க்கான நில அளவையர் வரைபடம்.

நீ.ம.சா.ஆ.4. 20.08.2010 ம் தேதியிட்ட ஆணையர் அறிக்கை.

நீ.ம.சா.ஆ.5. 25.04.2022 ம் தேதியிட்ட ஆணையர் அறிக்கை.

நீ.ம.சா.ஆ.6. டி.கொக்குளம் புல எண்.17–க்கான புல வரைபடம்

நீ.ம.சா.ஆ.7. டி.கொக்குளம் புல எண்.18–க்கான புல வரைபடம்

(ஓம்.சி.தினேஷ்குமார்)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**அசல் வழக்கு எண்.93/2010**
**செவ்வை – தீர்ப்புரை**
**நாள் : 28.04.2023**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. சி.தினேஷ்குமார், M.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.
2023–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் நாள், வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.93/2010
CNR No.TNMD130000392010
-----

மதுரை–17, தபால்தந்தி நகர், 3 வது தெரு, கதவு எண்.3,
என்ற விலாசத்தில் வசித்து வரும் இந்து சுமார் 53
வயதுள்ள லேட்.மாரிமுத்து மகன் சந்திரசேகரன். ... வாதி

/ எதிர்/

1. மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, டி.கொக்குளம் என்ற விலாசத்தில் உள்ள் டி.கொக்குளம் பஞ்சாயத்து அலுவலகத்தின், தலைவர்.

2. மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, கள்ளிக்குடி என்ற விலாசத்தில் உள்ள பஞ்சாய்த்து அலுவலகத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர்.

3. தமிழக அரசிற்காக அதன், மதுரை–20, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மதுரை மாவட்ட ஆட்சி தலைவர் மூலம். ... பிரதிவாதிகள்

தாவா அ அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர் பரிகாரமாக தாவா ஆ அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிரதிவாதிகள் அகற்ற வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தவறினால் நீதிமன்றம் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரியும், தாவா அ அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளோ அல்லது அவரது வகையாட்களோ வேறு எவ்விதமான கட்டுமானங்களோ கட்டக்கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை

பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>தாவாவின் பெறுமானம்</u>

**அ பரிகாரம்** :

| | | |
|---|---|---|
| தாவா சொத்தின் கிஸ்தி மதிப்பு | : | ரூ.1.69 |
| அதன் 30 மடங்கு (30x1.69) | : | ரூ.50.70 |
| அதன் பாதி பங்கு | : | ரூ.25.35 |
| வாதியின் தாவா அ பரிகாரமான 25(b)க்கு | : | ரூ.1,000/– |
| தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டு சட்டம் பிரிவு 25(b) –ன்படி | : | ரூ.75.50/– |

**ஆ பரிகாரம்** :

| | | |
|---|---|---|
| வாதியின் தாவா ஆ பரிகாரமான 27(C)க்கு | : | ரூ.1,000/– |
| தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டு சட்டம் பிரிவு 27(C) –ன்படி | : | ரூ.75.50/– |

| | | |
|---|---|---|
| தாவாவின் மொத்த மதிப்பு | : | ரூ.2,000/– |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | : | ரூ.151/– |

| | | |
|---|---|---|
| வழக்கு மூலம் எழுந்த நாள் | : | 19.08.1964, 21.02.2010. |
| வழக்கு தாக்கலான நாள் | : | 22.02.2010. |

இவ்வழக்கானது கடந்த 06.04.2023 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருந்த வழக்கில், 1 ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை, சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்பாணை</u>

1. இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்தும்,
2. தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகளால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை 2 மாத காலத்திற்குள் பிரதிவாதிகள் அகற்ற வேண்டும் என்ற செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,
3. தாவா சொத்தில் பிரதிவாதிகள் மேற்கொண்டு கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என்ற நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இந்த நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.
4. செலவு தொகை இல்லை. (இரு தரப்பிலும் செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை )

## <u>சொத்து விபரம்</u>

<u>A SCHEDULE</u>

Madurai District, Tirumangalam Taluk, T.Kokkulam Village, Punja land in Survey No.17/18 with an extent of 18cents South on the East out of 1 acre 14 cents within the following boundaries :

North : Punja land of Marimuthu,

South : Cart track,

East : School,

West : Land of Chinnana Naicker.

<u>B SCHEDULE</u>

Encroachments made by the defendantsin A Schedule Madurai District, Tirumangalam Taluk, T.Kokkulam Village, Punja land in Survey No.17/18 out of 1 acre 14 cents in the South Eastern 18 cents in the Eastern portion RCC building with compound wall measuring North South 58 feet and East West 38 feet totaling to 2204 sq. feet situate within the following boundaries :

North : Kallani Road,

South : Cart track,

East : School,

West : Remaining Land in A schedule.

**<u>செலவு தொகை பட்டியல்</u>**

இல்லை

2023−ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டும் இந்நீதிமன்ற முத்திரையிடப்பட்டும் வழங்கப்பட்டது.

(ஓம்.சி.தினேஷ்குமார்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.93/2010
தீர்ப்பாணை
நாள்: 28.04.2023